ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்- 320)   Jun (1)/ 2020

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. ஸங்கல்ப ஸூர்யோதயம் 5

3. தத்வ த்ரயம்..7

4. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)...12

5. ஸ்தோத்ர ரத்னம் (பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்)...........................18

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 140)

51. இதி வ்யாமிச்ர க்ருத்யம் தத் ப்ரோக்தம் பலஸூதந
அச்சித்ராந் பஞ்சகாலாம்ஸ்து பகவத் கர்மணா நயேத்

பொருள் – இந்த்ரனே! இப்படியாக உனக்கு நான் பலவிதமான கர்மங்களைக் கலந்து உரைத்தேன். ஒருநாளின் ஐந்து காலங்களிலும், உபாஸகன் ஒருவன், பகவத் கர்மங்களைத் தொடர்ந்து இயற்றியபடி இருப்பானாக.

52. தீக்ஷித: பஞ்சகாலஜ்ஞோ லக்ஷ்மீ மந்த்ர பராயண:
அந்தரம் நாநயோ: கிஞ்சித் திஷ்டாயாம் பலஸூதந

பொருள் – இந்த்ரனே! இவ்விதம் ஒருநாளின் ஐந்து காலங்களிலும், உபாஸகன் ஒருவன், பகவத் கர்மங்களைத் தொடர்ந்து இயற்றியபடி இருத்தல் மற்றும் லக்ஷ்மீ மந்த்ரத்தைத் தொடர்ந்து பாராயணம் செய்தபடி இருத்தல் ஆகிய இரண்டிற்கும் எந்தவிதமான வேறுபாடும் காணப்படுவதில்லை.

53. உபாவேதௌ மதௌ விசதோ மாம் தநுக்ஷயே
சக்ர பத்ம தரோ நித்யம் பவேத் லக்ஷ்மீ பராயண:

பொருள் – இந்த இருவருமே சிறந்த பக்தர்களாகக் கொள்ளப்படுகிறார்கள். இந்த இருவருமே சங்கு, தாமரை போன்ற அடையாளங்களைத் தரித்தவர்களாக உள்ளனர். யார் ஒருவன் லக்ஷ்மியைத் தொடர்ந்து பாராயணம் செய்தபடி உள்ளானோ அவன் தனது மரணத்திற்குப் பிறகு என்னையே அடைகிறான்.

54. ஸ்வதாரநிரதச்ச ஸ்யாத் ப்ரஹ்மசாரீ ஸதா பவேத்
மத் மந்த்ரம் அபி அஸேந்நித்யம் மத் சிதோ மத் பராயண:

பொருள் – உபாஸகன் தனது மனைவிக்கு உண்மையானவனாகவும், ப்ரஹ்மசர்ய விரதத்தைப் பூண்டவனாகவும், எனது மந்த்ரத்தை என்னையே எப்போதும் த்யானித்தபடி உச்சரிப்பவனாகவும், எனது கைங்கர்யங்களில் ஈடுபட்டவனாகவும் இருக்கவேண்டும்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

ஸங்கல்ப ஸூர்யோதயம்

(பகுதி – 7)

10. யே லோகாந் இஹ வஞ்சயந்தி விரலோதஞ்சந்மஹாகஞ்சுகா:
தே திஷ்டந்து மஹத் க்ருஹேஷு மணய: கிம் தைரிதம் சிந்த்யதாம்
ஸ்ரீவத்ஸ ப்ரதிவேசதீபரூசிநா ஸார்தம் கிமாபாஷ்யதே
பத்மோல்லாஸந தர்பணேந மணிநா ப்ரத்நேஷு ரத்நேஷ்வபி

பொருள் – (ஸூத்ரதாரன் கூறுவது) ஒரு சிலர் தங்களுடைய ஆடைகளில் இணைத்துக் கொள்ளும் கற்களானவை, விலை மதிப்பற்ற இரத்தினங்கள் போன்றே மயக்குகின்றன. அவை செல்வந்தர்களுடைய வீட்டிலேயே இருக்கட்டும். அவற்றால் என்ன பயன் உள்ளது? மிகவும் புராதானமான இரத்தினக்கற்களை எடுத்துக் கொண்டாலும் கூட, அவற்றை கௌஸ்துபத்திற்கு இணையாக வைக்க இயலுமோ? ஸர்வேச்வரனுடைய திருமார்பில் உள்ள ஸ்ரீவத்ஸம் என்னும் மருவிற்கு அருகில் வைக்கப்பட்டுள்ள கௌஸ்துபம் நமக்கு, தாமரையாளை மிகவும் உல்லாஸமாகக் காண்பித்துக் கொடுக்கின்ற தீபம் போன்றும், கண்ணாடி போன்றும் உள்ளது அல்லவோ?

(ஸூத்ரதாரன் தொடர்கிறான்) – இந்த நாடகத்திற்கு மேலும் ஒரு காரணத்தாலும் மேன்மை உள்ளது.

11. அபதிச்ய கிமப்யசேஷகுப்த்யை நிகமாந்தேஷு நிரூடகௌரவேண
ப்ரவிபக்த ஹிதாஹித: ப்ரயோக: கவிநா காருணிகேந கல்பித: அஸௌ

பொருள் – (ஸூத்ரதாரன் கூறுவது) இந்த உலகத்தைக் காக்கவேண்டும் என்னும் கருணை காரணமாக, உலகில் உள்ள நன்மைகள் மற்றும் தீமைகள் ஆகியவற்றைப் பிரித்து உணர்த்தும்படியாக, மற்ற அனைத்து சாஸ்த்ரங்களைக் காட்டிலும் வேதாந்தத்திற்கு உள்ள மேன்மையை அறிந்தவராக உள்ள வேதாந்தாசார்யன் என்னும் கவியால் இது இயற்றப்பட்டது.

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச் செய்த

தத்வ த்ரயம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 16)

வ்யாக்யானம் – ஆனால், "ஏஷ ஹ்யேவஸாது கர்ம காரயதி, தம் யமேப்யோ லோகேப்ய உந்நிநீஷதி, ஏஷ ஏவாஸாது கர்ம காரயதி, தம் யமதோ நிநீஷதி" என்று உந்நிநீஷையாலும், அதோநிநீஷையாலும் ஸர்வேச்வரன் தானே ஸாத்வஸாது கர்மங்களைப் பண்ணுவியாநிற்குமென்கிற இது சேரும்படி என்? என்னில், இது ஸர்வஸாதாரணமன்று; யாவனொருவன் பகவத் விஷயத்தில் அதிமாத்ரமான ஆநுகூல்யத்திலே வ்யவஸிதனாய்க்கொண்டு ப்ரவர்த்தியா நிற்கும் அவனை அநுக்ரஹியா நின்றுகொண்டு பகவான் தானே ஸ்வப்ராப்தயுபாயங்களாய், அதிகல்யாணங்களான கர்மங்களிலே ருசியை ஜநிப்பிக்கும்; யாவனொருவன் அதிமாத்ர ப்ராதிகூல்யத்திலே வ்யவஸிதனாய்க் கொண்டு ப்ரவர்த்தியா நிற்கும அவனை ஸ்வப்ராப்தி விரோதிகளாய், அதோகதி ஸாதநங்களான கர்மங்களிலே ஸங்கிப்பிக்கும் என்று இந்த ச்ருதி வாக்யங்களுக்கு அர்த்தமாகையாலே, இது தன்னை ஸர்வேச்வரன் தானே அருளிச்செய்தானிறே, "அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்தஸ்ஸர்வம் ப்ரவர்த்ததே இதி மத்வா பஜந்தே மாம் புதாபாவஸமந்விதா:" என்று தொடங்கி, "தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் பரீதிபூர்வகம் ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே; தேஷாமேவாநுகம்பார்த்தம் அஹமஜ்ஞாநஜம் தம: நாசயாம்யாத்மபாவஸ்த்தோ ஜ்ஞாந தீபேந பாஸ்வதா" என்றும், "அஸத்யமப்ரதிஷ்டம் தே ஜகதாஹுர நீச்வரம்" என்று தொடங்கி "மாமாத்ம பரதேஹேஷு ப்ரதவிஷந் தோப்யஸூயகா:" என்னுமதளவாக அவர்களுடைய ப்ராதிகூல்யாதிசயத்தைச் சொல்லி, "தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் க்ஷிபாம்யஜஸ்ரமசுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு" என்றும் அருளிச் செய்கையாலே. ஆகையால், அநுமந்த்ருத்வமே

ஸர்வஸாதாரணம்; ப்ரயோஜகத்வம் விசேஷ விஷயமென்று கொள்ளவேணும். "க்ருத ப்ரயத்நாபேக்ஷஸ்து" என்கிற ஸூத்ரத்திலே இதெல்லாம் பாஷ்யகாரர் தாமே அருளிச்செய்தார். இவை எல்லாவற்றையும் திருவுள்ளம் பற்றியிறே "கர்த்ருத்வம்தான் ஈச்வராதீநம்" என்று அருளிச்செய்தது.

விளக்கம் – ஆனால், கௌஷீதகீ உபநிஷத்தில் - ஏஷ ஹ்யேவஸாது கர்ம காரயதி, தம் யமேப்யோ லோகேப்ய உநநிநீஷதி, ஏஷ ஏவாஸாது கர்ம காரயதி, தம் யமதோ நிநீஷதி - எந்த ஒரு ஆத்மாவை இந்த லோகத்திலிருந்து உயர்ந்த ஸர்வேச்வரன் எண்ணுகிறானோ, அந்த ஆத்மாவையே நல்ல செயல்கள் புரியும்படிச் செய்கிறான்; எந்த ஆத்மாவை நரகத்தில் ஆழ்த்த எண்ணுகிறானோ, அந்த ஆத்மாவைத் தீய செயல்கள் செய்யும்படியாகத் தூண்டுகிறான் - என்று கூறுவதற்கு ஏற்ப, உயர்ந்த இடம் மற்றும் தாழ்ந்த இடம் ஆகிய இடங்களை அடையச் செய்யும்விதமாக, ஸர்வேச்வரன் தானாகவே ஆத்மாவை நல்ல செயல்கள் மற்றும் தீய செயல்கள் செய்யும்படியாகச் செய்யும்போது, மேலே கூறப்பட்ட கருத்துக்கள் எப்படிப் பொருந்தும்? இதற்கு விடை அளிக்கிறார். இது அனைவருக்கும் பொதுவானது அல்ல. யார் ஒருவன் பகவத் விஷயத்தில் எல்லையற்ற ஈடுபாடுடன் உள்ளானோ, அவனைப் பகவான் அனுக்ரஹிக்கத் தொடங்குகிறான், அவன் தன்னை அடைவதற்கான உபாயமாகப் பகவான் தானே நிற்கிறான், மிகுந்த மங்களகரமான கர்மங்களில் அவனுக்கு ஆசையை ஏற்படுத்துகிறான். ஆனால் ஒருவன், பகவானுக்கு விருப்பம் இல்லாத செயல்களைச் செய்ய முயன்றபடி இருப்பான்; அவன், பகவானாகிய தன்னை அடைவதற்கான தடைகளைப் பகவானே ஏற்படுத்தி, மேலும் தாழ்ந்த நிலைக்குச் செல்லக் கூடிய கர்மங்களை அவன் செய்யும்படியாக பகவானே தூண்டுகிறான். இதுவே மேலே உள்ள ச்ருதி வாக்கியத்தின் பொருள் என்பதால், இதனை ஸர்வேச்வரன் தானே கீதையில் (10-8) – அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்த்ததே | இதி மத்வா பஜந்தே தம் புதா பாவஸமந்விதா – "நானே அனைத்தும் தோன்றுவதற்கான காரணம் ஆவேன், அனைத்தும் என்னால் செய்யப்படுகிறது" என்று அறிந்து கொள்ளும் அறிஞர்களாகிய பக்தர்கள் என்னை இடைவிடாது உபாஸிக்கிறார்கள் - என்று கூறத் தொடங்கி, கீதை (10-10) - தேஷாம் ஸதத யுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம் ததாமி புத்தியோகம் தம் யேந மாம் உபயாந்தி தே - எப்போதும் என்னுடன்

சேர்ந்திருக்கவேண்டும் என்னும் ஆசை கொண்டவர்களாக, என்னை மிகுந்த அன்புடன் உபாஸிப்பவர்களுக்கு, என்னை அடைவதற்கான புத்தியோகத்தை நான் அளிக்கிறேன் - என்றும், கீதை (10-11) – தேஷாம் ஏவ அநுகம்பார்த்தம் அஹம் அஜ்ஞாநஜம் தம: | நாசயாமி ஆத்ம பாவஸ்தோஜ்ஞாந தீபேந பாஸ்வதா - அப்படிப்பட்டவர்களை அனுக்ரஹிக்கும்விதமாக நான் அவர்களுடைய உள்ளத்தில் நிலைத்து நின்று, அறியாமையால் ஏற்படும் இருளை, என்னைக் குறித்த ஞானம் என்ற ஒளியால் அழிக்கிறேன் - என்றும் கூறியதைக் காணலாம். இதனைப் போன்றே கீதையில் (16-8) – அஸத்யம் அப்ரதிஷ்டம் தே ஜகதாஹு: அநீச்வரம் – அவர்கள், “இந்த உலகம் ஸத்யம் அற்றது, பரமாத்மாவை ஆதாரமாகக் கொண்டது அல்ல, என்னால் நியமிக்கப்படுவது அல்ல” என்று கூறுகிறார்கள் – என்று தொடங்கி, கீதை (16-18) - மாமாத்ம பரதேஹேஷு ப்ரத்விஷந்தோ அப்யஸூயகா: - தங்கள் உடலிலும் மற்றவர்கள் உடலிலும் அந்தர்யாமியாக உள்ள என்னை வெறுத்து, என்னைக் குறித்து பொறாமை அடைகிறார்கள் - என்று முடித்தான். இதனைத் தொடர்ந்து கீதையில் (16-19) – தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் | க்ஷிபாமி அஜஸ்ரம் அஶுபாந் ஆஸுரீஷ்வேவ யோநிஷு - இப்படியாக யார் என்னை வெறுக்கிறார்களோ, பாபம் செய்கிறார்களோ, கொடியவர்களோ, அப்படிப்பட்டவர்களை நான் இந்த ஸம்ஸாரச் சூழற்சியில் தொடர்ந்து உழலும்படியாக அஸுரப் பிறவிகளில் தள்ளுகிறேன் - என்றது காண்க. ஆகவே கர்மங்களுக்கான அனுமதி அளித்தல் என்பது அனைவருக்கும் பொதுவானதே ஆகும். சிறந்த கர்மங்களைச் செய்யவைத்தல் என்பது மட்டுமே சிறப்பித்துக் கூறப்பட்டதாகக் கொள்ளவேண்டும். ப்ர. ஸூ. (3-2-40) - பூர்வம் து பாதராயண: ஹேதுவ்யபதேசாத் - பலனை அளிப்பதால் முந்தையதே என்று பாதராயணர் கூறுகிறார் - என்பதில் இவை அனைத்தையும் பாஷ்யகாரர் தானே அருளிச்செய்தார். இவை அனைத்தையும் திருவுள்ளம் பற்றியே சூர்ணையில் “கர்த்ருத்வம்தான் ஈச்வராதீநம்” என்று அருளிச்செய்தார்.

வ்யாக்யானம் – ஆக, கீழ்ச் செய்ததாயிற்றது : “ஜ்ஞாநாச்ரயமாகையாவது ஜ்ஞாநத்துக்கு இருப்பிடமாயிருக்கை” என்று ப்ரதமத்திலே ஆத்மாவினுடைய ஜ்ஞாத்ருத்வத்தைச் சொல்லி, ஜ்ஞாந மாத்ரமென்பாரை நிராகரித்துக்கொண்டு,

ஜ்ஞாத்ருத்வ கதநாநந்தரம் கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள் சொல்லவேண்டுகையாலே அவை இரண்டும் ஜ்ஞாத்ருத்வ பலத்தாலே தன்னடையே வருமென்னுமிடத்தை தர்சிப்பித்து, குணங்களுக்கே கர்த்ருத்வமுள்ளது ஆத்மாவுக்கு இல்லை என்பாரை நிராகரித்துக் கொண்டு, ஆத்மாவினுடைய கர்த்ருத்வத்தை ஸ்தாபித்து, அந்த கர்த்ருத்வத்தில் ஸ்வரூப ப்ரயுக்தமல்லாத அம்சத்தையும், அதுதானிவனுக்கு வருகைக்கடியையும் சொல்லி, இப்படி ஆத்மாவுக்குண்டான கர்த்ருத்வம்தான் ஸர்வாவஸ்தையிலும் ஈச்வராதீநமா யிருககுமென்று நிகமித்தாராயிற்று. இதெல்லாம் ஆத்மாவினுடைய ஜ்ஞாநாச்ரயத்வ கதநமடியாக வந்ததிறே.

விளக்கம் - ஆகவே இதுவரை கூறப்பட்டது என்ன? "ஜ்ஞாநாச்ரயமாகையாவது ஜ்ஞாநத்துக்கு இருப்பிடமாயிருக்கை" என்று தொடக்கத்தில், ஆத்மாவின் "அறிபவனாக உள்ள தன்மை" என்பதை உரைத்தார்; ஆத்மாவானது ஞானம் மட்டுமே ஆவான் என்று கூறும் கருத்தைத் தள்ளினார்; அறிபவனாக உளள தன்மை என்பதைக் கூறியதைத் தொடர்ந்து, செயல் புரிபவனாக இருத்தல் மற்றும் அனுபவிப்பனாக இருத்தல் ஆகிய இரண்டையும் கூறவேண்டும் என்பதால், அவை இரண்டும், அறிபவனாக உள்ள தன்மை என்பதைத் தொடர்ந்து தாங்களாகவே வெளிப்படும் என்று உணர்த்தினார்; தொடர்ந்து, "குணங்களுக்கே செயல் புரியும் தன்மை உள்ளது, ஆத்மாவிற்கு அல்ல" என்று கூறும் வாதத்தை தள்ளினார்; ஆத்மாவின் செயல் புரியும் தன்மை என்பதை நிலை நாட்டினார்; அத்தகைய செயலாற்றும் தன்மை என்பது ஆத்மாவிற்கு ஸ்வரூபத்திலேயே உள்ளதல்ல என்றும், அது அவனுக்கு வந்து சேர்கின்ற ஒன்றாகும் என்றும் உரைத்தார். இப்படியாக ஆத்மாவுக்கு உள்ள செயலாற்றும் தன்மை என்பதும், அனைத்து நிலைகளிலும் ஈச்வரனுக்கு வசப்பட்டே உள்ளதாகும் என்றும் கூறி நிறைவு செய்தார்.

அவதாரிகை - இப்படி ஆத்மா ஜ்ஞாநாச்ரயமாயிருக்குமாகில், "யோ விஜ்ஞாநே திஷ்ட்டந்", "விஜ்ஞாநமய:", "விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே" என்றும், "ஜ்ஞாந ஸ்வரூபமத்யந்த நிர்மலம் பரமார்த்தத:", "ஜ்ஞாந ஸ்வரூபமகிலம் ஜகதேததபுத்தய:", "விஜ்ஞாநம் பரமார்த்தோ ஹி த்வைதி நோதத்யதர்சிந:" என்றும் சாஸ்த்ரங்களிலே

இவனை ஜ்ஞாநமென்று சொல்லுவானேன்? என்கிற ஜிஜ்ஞாஸு ப்ரச்நத்தை அநுவதிக்கிறார்.

விளக்கம் – இவ்விதம் ஆத்மாவானது ஞானத்திற்கு இருப்பிடம் என்று கூறும்போது, ப்ரு. (3-7-22) - யோ விஜ்ஞாநே திஷ்டந் – விஜ்ஞாநத்தில் உறைபவன் யாரோ – என்றும், தைத். (2-4-1) - விஜ்ஞாநமய: - ஞானமயமாக உள்ளவனும் – என்றும், தை. (2-5) - விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே - ஜ்ஞானம் யஜ்ஞத்தை இயற்றுகிறது – என்றும், ஸ்ரீவிபு. (1-2-6) – ஜ்ஞாந ஸ்வரூபம் அத்யந்த நிர்மலம் பரமார்த்தத: – ஞானமயமானவனும், அனைத்து குணங்களும் நீங்கப் பெற்றவனும், இதனால் தூய்மையாக உள்ளவனும் – என்றும், ஸ்ரீவிபு. (1-4-40) - ஜ்ஞாந ஸ்வரூபம் அகிலம் ஜகத் ஏதத் அபுத்தய: - இந்த உலகம் ஞானஸ்வரூபமாகவே உள்ளது – என்றும், ஸ்ரீவிபு. (2-14 -31) - விஜ்ஞாநம் பரமார்த்தோ ஹி த்வைதிநோ அதத்ய தர்சிந: - ஞானமயமான ப்ரஹ்மத்தை இவ்விதம் அறிவதே உண்மையானது; இரண்டு என்று எண்ணியபடி உள்ளவர்கள் உண்மை அறியாதவர் ஆவர் – என்றும் பலவிதமாகச் சாஸ்த்ரங்களில் ஆத்மாவை ஞானம் என்று ஏன் கூற வேண்டும் என்று அறிய விரும்புபவர்களுடைய கேள்வியை உரைக்கிறார்.

36. ஜ்நாநாச்ரயமாகில் சாஸ்த்ரங்களிலே இவனை ஜ்ஞாநமென்று சொல்லுவானேன்? என்னில்;

வ்யாக்யானம் – "ஜ்நாநாச்ரயமாகில் சாஸ்த்ரங்களிலே இவனை ஜ்ஞாநமென்று சொல்லுவானேன்? என்னில்" என்று,

விளக்கம் – அந்தக் கேள்வியானது, "ஆத்மாவானது ஞானத்தின் இருப்பிடம் என்றால், சாஸ்த்ரங்களில் ஆத்மாவை ஞானம் என்று ஏன் கூறவேண்டும்?", என்பதாகும்.

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 285)

4-6-1 தீர்ப்பாரை யாம் இனி எங்ஙனம் நாடுதும்? அன்னைமீர்!
ஓர்ப்பால் இவ்வொண்ணுதல் உற்ற நல் நோயிது தேறினோம்
போர்ப் பாகு தான் செய்த அன்றைவரை வெல்வித்த மாயப் போர்த்
தேர்பாகனார்க்கு இவள் சிந்தை துழாய்த்திசைக்கின்றதே

பொருள் – அன்னைமார்களே! இவளுக்கு ஏற்பட்டுள்ள இந்த நோயினைத் தீர்ப்பதற்கு ஏற்றவர்களை நாங்கள் எப்படித் தேடுவோம்? இப்போது நிரூபிக்கப்பட்ட காரணத்தால், ஒளி வீசும் நெற்றியைக் கொண்ட இந்த பெண் அடைந்த நோயின் தன்மை இன்னது என்று தெளிந்து நிற்கிறோம். இந்த நோயானது, பாரதப் போருக்கான அனைத்து செயல்களையும் தானே செய்துவிட்டு, பஞ்சபாண்டவர்கள் வெல்லும்படியாக ஒரு மாயப்போர் புரிந்த தேப்பாகனார் குறித்து இவளுடைய மனம் கலங்கி நிற்பதால் ஏற்பட்டது.

அவதாரிகை – தோழி, இவள் நோய்க்கு நிதாநத்தைச் சொல்லி, "நீங்கள் செய்கிறவை பரிஹாரமன்று" என்று விலக்குகிறாள்.

விளக்கம் – அன்னைமார்களிடம் தோழியானவள் அந்தப் பெண்ணின் நோய்க்கான காரணத்தை உரைத்து, "நீங்கள் செய்யும் செயல்கள் ஏதும் இதற்கான பரிகாரம் அல்ல", என்கிறாள்.

வ்யாக்யானம் – (தீர்ப்பாரை யாம் இனி எங்ஙனம் நாடுதும்) – இதுக்கு மூன்றுபடியாக அருளிச்செய்தருளுவர்; "தீர்ப்பாரை – எங்ஙனம் நாடுதும்" என்கையாலே, "நீங்கள் செய்கிறவை பரிஹாரமல்ல" என்று அவற்றை நிஷேதிக்கையிலே தாத்பர்யம்; இவர்கள் பரிஹரியாநிற்கப் பரிஹரிப்பாரை எங்கே தேடுவோமென்கை; இது பரிஹாரமல்லவென்றதாய் வருமிறே. அங்ஙனன்றிக்கே, இவளோடொக்க மோஹிப்பாரைக் கிடைக்குமத்தனை போக்கிப் பரிஹாரம் பண்ணுவாரை எங்கே தேடுவோம்? ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல ஆக்கிக்கொண்டிறே இருப்பது. அன்றிக்கே, தானும் இப்போது பரிஹரிப்பாரை ஆராயா நிற்கிறாளென்று தோற்றியிருந்தது. அன்றிக்கே, "கடல் வண்ணரிது செய்தார் காப்பாரார்" என்கிறபடியே, ஔஷதமே அபத்யமானால் பரிஹாரமுண்டோ? "நச்சு மாருந்த"மிறே அபத்யமாகிறது; "நிர்வாணம் பேஷஜம் பிஷக்" என்கிறவனாயிற்று பாதகனாகிறான்.

விளக்கம் - (தீர்ப்பாரை யாம் இனி எங்ஙனம் நாடுதும்) - இதற்கு மூன்றுவிதமாகப் பொருள் உரைப்பார்கள். "தீர்ப்பாரை – எங்ஙனம் நாடுதும்" என்று கூறுவதால், "நீங்கள் செய்யும் ஏதும் தகுந்த பரிகாரம் அல்ல" என்று அவற்றைத் தள்ளுவதில் குறிக்கோள் உள்ளதாகக் கருத்து. அதாவது பரிகாரம் செய்வதற்கான வழிகளை ஆராய்ந்தபடி உள்ளபோது, "தீர்ப்பாரை எங்கு சென்று தேடுவோம்?" என்று உரைத்தால், இந்தச் செயல்கள் எதுவும் பரிகாரம் அல்ல என்றாகும் அல்லவோ? அல்லது வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். இவள் ஊரையும், நாட்டையும், உலகத்தையும் தன்னைப் போன்று மாற்றியபடியே உள்ளாள்; ஆகவே அனைவரும் இவளைப் போன்றே மயங்கிக் கிடக்கும்போது, இவளுடைய நோய் தீர்ப்பவர்களை எங்கு சென்று தேட இயலும் என்று கேட்பதாகக் கொள்ளலாம். அல்லது வேறுவிதமாகவும் பொருள் கொள்ளலாம். இவளும் சேர்ந்து கொண்டு இப்போது இந்த நோயைத் தீர்ப்பவர் யார் என்று ஆராய்ந்தபடி உள்ள நிலை வெளிப்படுவதாக உள்ளது. அல்லது, திருநெடுந்தாண்டகம் (11) – கடல் வண்ணர் இது செய்தார் காப்பார் ஆர் - என்று கூறுவதற்கு ஏற்ப மருந்தே நோயைத் தீர்ப்பதற்குத் தடையாக இருக்கும்போது, அந்த நோயை எதன் மூலம் நீக்க இயலும்? திருவாய்மொழி (3-4-5) – நச்சு மா மருந்து – என்று கூறுவதற்கு ஏற்ப உள்ள மருந்தாக இருக்கும் அவனே தடையாகவும் உள்ளான். ஸ்ரீவிஷ்ணு

ஸஹஸ்ர நாமத்தில் - நிர்வாணம் பேஷஜம் பிஷக் – ஆனந்தமாகவும் மருந்தாகவும் உள்ளவன் - என்று கூறப்படுபவன் அல்லவோ இங்கு பாதிப்பை ஏற்படுத்துகிறான்?

வ்யாக்யானம் - (யாம்) "அன்னைமீர்" என்னாநிற்கச் செய்தேயிறே "யாம்" என்கிறது; தாய்மார்க்கும் தோழிமார்க்கும் வாசியற்றபடி. தாய்மார் மங்களாசாஸநம் பண்ணி மீளா நிற்க, "சோகபாரேண சக்ராந்தாச்சயநம் ந ஜஹுஃஸ்ததா" என்று அதுவும் மாட்டாதே கிடந்தார்களிறே தோழன்மார்; ஆகையாலே, தாய்மார்க்கும் தோழிமார்க்கும் வாசியறுக்கும் விஷயமென்னுதல்; தோழிமார்க்கு ஏற்றம் சொல்லுகிறதாதல். (இனி) "நோயின்னது" என்று அறிந்த பின்பு, (எங்ஙனம் நாடுதும்) இனிப் பரிஹாரமுண்டோ? "எங்கே தேடக் கடவோம்?" என்றவாறே, "இவள் கையது நம் கார்யம், இவள் அறிந்தாளாக அடுக்கும்" என்று பார்த்த பந்து வர்க்கமடைய இவள் மேலே ஒருமுகம் செய்தது; "இனி நாம் முன்னேயறிந்தோமாகச் சொல்லில் நம் காவற் சோர்வாலே வந்ததாம்; நாம் இப்போது நிரூபித்தோமாவோம்" என்று பார்த்து, (ஓர்ப்பால்) இப்போது ஓர்ந்து பார்த்தவிடத்து. நீங்களும் ஆராயா நின்றிகோளிறே; உங்களோபாதி நானும் ஆராய்ந்து பார்த்தவிடத்தில் இங்ஙனே தோற்றிற்று; இவள்தான் ஒரு கூரத்தாழ்வானோடு ஒக்குங்காணும்; மநஸ்ஸை ப்ரத்யக் விஷயமாக்கினால் தத்வ த்ரயத்தையும் அலகலகாகக் காணவல்லளாயிற்று.

விளக்கம் - (யாம்) - "அன்னைமீர்" என்று மட்டும் கூறாமல், "யாம்" என்று ஏன் கூறவேண்டும் என்றால், தாய்மார் மற்றும் தோழிமார் ஆகியவர்களுக்கு இடையில், இவள் விஷயத்தில் எந்தவேறுபாடும் இல்லை என்பதால் ஆகும். ஆனாலும் இவர்கள் இருவருக்கும் இடையே வேறுபாடு உள்ளது என்று கூறுகிறார். தாய்மார்கள் இவள் நன்றாக இருக்கவேண்டும் என்று கூறி விட்டுச் சென்றனர்; ஆனால் தோழிமார்கள் அயோத்யாகாண்டத்தில் – சோகபாரேண சக்ராந்தாச்சயநம் ந ஜஹுஃஸ்ததா – இராமனுடைய பந்துக்கள் அனைவருமே மனம் கலங்கியவர்களாக, சோகம் என்ற கனம் மூலம் அழுத்தப்பட்டவர்களாகப் படுக்கையிலிருந்து எழ இயலாமல் இருந்தனர் - என்பதற்கு ஏற்ப, ஏதும் செய்ய இயலாமல் இருந்தனர். எனவே தாய்மார்களுக்கும் தோழிமார்களுக்கும் வேறுபாடு

உள்ளது என்பதை, தோழிமார்களுக்கு உள்ள ஏற்றத்தின் மூலம் கூறுகிறார். (இனி) நோயானது இன்னது என்று அறிந்த பின்னர். (எங்ஙனம் நாடுதும்) - தோழியானவள், “இந்த நோய்க்கு மருந்து உள்ளதோ? எங்கே தேடுவது?”, என்று கூறினாள். இதனைக் கேட்ட உறவினர்கள், “இந்தத் தோழியிடமிருந்து உண்மையை வரவழைப்பது நம்முடைய செயலாகும். இவள் இந்த நோயைக் குறித்தும், மருந்து குறித்தும் அறிந்தவளாகத் தோன்றுகிறாள்”, என்று எண்ணியவர்களாக, அனைவரும் சேர்ந்து அவள் மீது பழி கூற முடிவு கட்டினர். இதனை உணர்ந்த தோழி தனது மனதில், “இந்த நோய் குறித்து நான் முன்பே அறிவேன் என்று கூறினால், இவர்கள் அனைவரும் சேர்ந்து கொண்டு, எனது காவலில் உள்ள குறைப்பாடு காரணமாகவே இவ்விதம் ஆயிற்று என்று உரைப்பார்கள். மாறாக, நானும் சேர்ந்து கொண்டு இப்போது தான் ஆராய்ந்து அறிந்தேன் என்று கூறிவிடுகிறேன்”, என்று தீர்மானித்தாள். (ஓர்ப்பால்) - இப்போது சிந்தித்து ஞாபகப்படுத்திப் பார்க்கும்போது. நீங்கள் ஆராய்ந்தபடி உள்ளீர்கள்; நானும் உங்களுடன் சேர்ந்து ஆராய்ந்தபடி உள்ளபோது, எனக்கு இப்படியாகத் தோன்றுகிறது. இவள் ஸ்வாமி கூரத்தாழ்வான் போன்று உள்ளாள். தனது மனதை மற்ற விஷயங்களில் திருப்பாமல், உள்ளே நிலைக்கும்படிச் செய்தால், “சித் – அசித்- ஈச்வரன்” என்பதான தத்வ த்ரயத்தைப் பகுதி பகுதியாகப் பிரித்து ஆராயவல்லவளாக உள்ளாள்.

வ்யாக்யானம் - (இவ்வொண்ணுதல்) இவ்விலக்ஷணமான நுதலையுடையவள். இம்முகத்தையுடையவளுக்கு முகாந்தரத்தாலே வருவதொரு நோயுண்டோ? “கண்ணன் கோளிழை வாண்முகமாய்க் கொடியேனுயிர் கொள்கின்றது” என்கிறபடியே அம்முகத்தாலே வரவேண்டாவோ? இவள் நோயென்றால் அவன் அடியாக வேண்டாவோ? ஸ்ரீபரதாழ்வான் நோயென்றால் சாதுர்த்திகமாயிருக்குமோ? ராம விரஹத்தாலே வந்ததென்று ப்ரஸித்தமன்றோ? இவளை இப்படி படுத்துவது ஒரு விஷயமாக வேண்டாவோ? அம்பு பட்ட வாட்டத்தோடே முடிந்தாரையும், நீரிலே புக்கு முடிந்தாரையும் முகத்திலே தெரியாதோ? குணாதிக விஷயத்தை ஆசைப்பட்டுப் பெறாமையாலுண்டான மோஹமாகையாலே முகத்தில் செவ்விக்கு ஆலத்தி வழிக்க வேண்டும்படியாயிற்று இருக்கிறது.

விளக்கம் - (இவ் ஒள் நுதல்) - இத்தகைய சிறப்பு கொண்ட நெற்றியை உடையவள். இப்படிப்பட்ட முகம் கொண்ட இவளுக்கு, அவன் முகம் அல்லாமல் வேறு ஒரு முகத்தால் வரும் நோய் உள்ளதோ? திருவாய்மொழி (7-7-8) – கண்ணன் கோளிழை வாண்முகமாய்க் கொடியேனுயிர் கொள்கின்றது – என்பதற்கு ஏற்ப, அவன் முகத்தால் அல்லவோ வரவேண்டும்? இவள் நோய் என்று இருந்தால், அதன் காரணம் அவனாக அல்லவோ இருப்பான்? ஸ்ரீபரதாழ்வான் நோய் என்னும்போது, அது வேறு விதமான நோயாக இருக்குமோ? அது இராமனைப் பிரிந்த துன்பத்தால் ஏற்பட்டதால் அல்லவோ இருக்கும்? இவ்விதம் இவளைத் துன்பத்தில் ஆழ்த்துவது வேறு ஒரு விஷயமாக இருக்க முடியுமோ? அம்பினால் அடிபட்ட துன்பம் மற்றும் நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட துன்பம் ஆகியவற்றால் இறந்தவர்களுடைய வேறுபாட்டினை, அவர்களுடைய முகத்தை நோக்கினால் அறியலாம் அல்லவோ? குணங்கள் நிறைந்த ஸர்வேச்வரன் விஷயமாக இவள் ஆசைப்பட்ட காரணத்தால், அவனைப் பெற இயலாமல் தவித்தபடி உள்ளாள்; இதனால் ஏற்பட்ட மயக்கமே இது என்பதால், முகத்தில் தென்படும் அழகானது, ஆலத்தி வழிக்க வேண்டும்படியாக உள்ளது.

வ்யாக்யானம் - (உற்ற) பரிஹாரமில்லாதபடி மறுபாடுருவங்கொண்ட நோய். (நல் நோய்) இந்நோவுதான் பரிஹரிக்க வேண்டா. கைக்கூலி கொடுத்துக் கொள்ளவேண்டும் நோய்; பரிஹரிக்க வேண்டா. இந்நோய் கொள்ளுகைக்கிறே முமுக்ஷுக்கள் புருஷகாரம் பண்ணுகிறது. இந் நோய் கொள்ளுகையன்றிக்கே பரிஹாரம் சொல்ல இருப்பதே நான்! ஜ்ஞாநம் பிறந்த பின்பு சரீராவஸாநத்தளவும் செல்ல தேஹ யாத்ரைக்கு உறுப்பாய், பின்பு தானே நித்ய ப்ராப்யமான நோயிறே. இதர ஸாதநாபேக்ஷயாய் ஸாதந புத்தி கழிந்தவன்று தானே ப்ராப்யமாயிருக்குமிறே. “பரமாபதமாபந்ந:” அடிக்கழஞ்சு பெற்ற ஆபத்தாயிற்று. இடர்ப்பட்டவிடத்திலே ஸர்வேஸ்வரன் அரைகுலையத் தலைகுலைய வந்து விழும்படியான ஆபத்தாயிற்று இது. “பக்த்யாத்வநந்யாசக்ய:” என்கிற இது உண்டானால் பின்னை அவன் கைப்பட்டானேயன்றோ?

விளக்கம் - (உற்ற) - மருந்து ஏதும் இன்றி, அனைத்தையும் பறித்துக் கொள்வதாக உள்ள நோய். (நல் நோய்) - இந்த நோயானது தீர்க்கப்பட வேண்டாத நோயாகும். கைக்கூலி கொடுத்தாவது பெற்றுக் கொள்ள வேண்டிய நோயாகும். இந்த நோயைப் பெறுவதற்காக அல்லவோ மோக்ஷத்தை விரும்பும் அனைவரும் புருஷகாரத்தைத் தேடியபடி உள்ளனர்? இந்த நோயைப் பெறுவதற்கு ஏற்ற வழியை உரைக்காமல், போக்குவதற்கான வழியை உரைக்கும் நிலையில் நான் உள்ளேனே! தகுந்த ஞானம் ஏற்பட்ட பின்னர், சரீரம் மறையும் காலம்வரை, சரீரத்தைத் தாங்கியபடி உள்ளதற்குக் காரணமாக, மரணத்தின் பின் எப்போதும் அடைந்தபடி உள்ள இலக்காக உள்ள நோய் அல்லவோ இது? மற்ற உபாயங்களை எதிர்பார்க்கும்போது தகுந்த உபாயமாக இல்லாமல், மற்ற உபாயங்கள் அனைத்தும் நீக்கியபோது தான் மட்டுமே பலனாக உள்ள நோய் அல்லவோ? பரமாபதமாபந்ந: - கொண்டாடத்தக்க ஆபத்தை அடைந்தவனாக - என்று கூறுவது போன்று கைக்கூலி கொடுத்து பெற்ற ஆபத்தாக கஜேந்த்ரனுக்கு நிலை இருந்தது; துன்பப்பட்ட அந்த இடத்தைத் தேடி ஸர்வேவரன் தனது இருப்பில் இருந்து, வஸ்த்ரம் நழுவ தலை கேசங்கள் கலைய ஓடி வந்து விழும்படியான ஆபத்தாக அல்லவோ இருந்தது? கீதை (11-54) – பக்த்யாத்வநந்ய அசக்ய: - வேறு எதனையும் கருதாத பக்தியால் காணப்படக்கூடியவனாக - என்பதற்கு ஏற்ப, இத்தகைய நிலை அறியப்பட்டால், அவன் நமக்குள் அடங்கியவனாக இருப்பான் அல்லவோ?

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி ஆளவந்தார் அருளிச் செய்த

ஸ்தோத்ர ரத்னம்

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த

வ்யாக்யானம்

(பகுதி – 1)

தனியன்கள்

1. ஸ்வாதயந் இஹ ஸர்வேஷாம்
த்ரய்யந்த அர்த்தம் ஸுதுர்க்ரஹம்
ஸ்தோத்ரயாமாஸ யோகீந்த்ர:
தம் வந்தே யாமுந ஆஹ்வயம்

பொருள் – எந்த ஒரு உயர்ந்த யோகியானவர், யாராலும் முழுவதுமாக அறிய இயலாத வேதாந்த ஆழ்பொருள்களை, இந்த உலகில் உள்ள அனைவரும் எளிதாக அனுபவிக்கும்படியாக ஸ்தோத்ர ரூபத்தில் வெளியிட்டாரோ, அந்த ஆளவந்தாரை நான் வணங்குகிறேன்.

2. நமோ நமோ யாமுநாய யாமுநாய நமோ நம:
நமோ நமோ யாமுநாய யாமுநாய நமோ நம:

பொருள் – ஆளவந்தாருக்கு நமஸ்காரம், நமஸ்காரம் ஆளவந்தாருக்கு உரித்தாகுக. ஆளவந்தாருக்கு நமஸ்காரம், நமஸ்காரம் ஆளவந்தாருக்கு உரித்தாகுக.

வ்யாக்யான அவதாரிகை

மூலம் - ஸர்வேச்வரன், ஆழ்வாருக்குத் தன்னுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளை "மயர்வற மதிநலமருளினன்" என் கிறபடியே நிர்ஹேதுக க்ருபையாலே காட்டிக்கொடுக்க, கொடுத்த ஜ்ஞானம் பக்தி ரூபாபந்ந ஜ்ஞானமாகையாலே, பரபக்தி யுக்தராய்க் கொண்டு, பகவத் குணாநுபவத்தைப் பண்ணி, அதினுடைய விபாகதசையான பரஜ்ஞானம் பிறந்து, அதடியாகப் பரமபக்தி பிறந்து, அத்தாலே, "பரம் ஜ்யோதிருப ஸம்பத்ய" என்றும், "பரமம் ஸாம்யமுபைதி" என்றும், "தம்மையேயொக்க அருள் செய்வர்" என்றும் சொல்லுகிறபடியே ஸ்வஸ்வரூபத்தைப் பெற்று, பார்யைக்கு அங்கபூஷணம் போலே "வழுவிலா அடிமை செய்ய வேண்டும்" என்றும், "அவாவற்று வீடு பெற்ற" என்றும் சொல்லுகிறபடியே ப்ராப்திபலமான கைங்கர்யத்தைப் பெற்ற ஆழ்வாருடைய த்ரவிடோபநிஷத் ரஹஸ்யத்தைப் பெரியமுதலியார் ஆழ்வாருடைய ப்ரஸாதத்தாலே லபித்து, பின்பு. ஆசார்யோபதேசக்ரமத்தாலே, ஆளவந்தார் அந்த த்ரவிடோபநிஷத் ரஹஸ்யார்த்தங்களை லபித்து, அத்தைத் தாம் அநுஸந்தித்து, அவ்வநுஸந்தானத்தால் பிறந்த ப்ரீதி உள்ளடங்காமையாலே, பரீவாஹாபேக்ஷை பிறக்கையாலும், ஸம்ஸாரிகள் துர்க்கதியைக் கண்டு இவர்கள் இத்தை இழக்கவொண்ணாது என்னும் க்ருபையாலும், ஸகலோபநிஷத் ரஹஸ்யமாய், துர்ஜ்ஞேயமான அர்த்தத்தை ஸர்வரும் அறியும்படியாக, இவர் ஸ்தோத்ரமாக வெளியிடுகிறார்.

விளக்கம் - ஸர்வேச்வரன் ஆழ்வாருக்குத் தன்னுடைய ஸ்வரூபம், ரூபம், குணங்கள், விபூதிகள் போன்றவற்றை திருவாய்மொழி (1-1-1) - மயர்வற மதிநலம் அருளினன் - என்பதற்கு ஏற்ப எந்தவிதமான ஐயமும் இன்றி அறியும்படியாக, எந்தவிதமான காரணமும் இன்றி சுரக்கின்ற தனது கருணையின் விளைவாகக் காண்பித்துக் கொடுத்தான். அப்படிப்பட்ட ஞானமானது, பக்தியின் விளைவாக ஏற்பட்ட ஞானம் என்பதால் பரபக்தியில் நிலைநிற்பதே தகுந்தது என்றுள்ளவராகையால், பகவத் குணங்கள் குறித்த அனுபவத்தில் திளைத்து, அதனைக் காட்டிலும் வேறுபட்ட நிலையான பரஜ்ஞானம் ஏற்பட்டு, அதன் விளைவாக பரமபக்தி பிறந்தது. இதன் காரணமாக, சாந். (8-1-2) - பரம்

ஜ்யோதிருப ஸம்பத்ய – உயர்ந்த ஜ்யோதியை அடைந்து தனது ஸ்வரூபத்தைப் பெறுகிறான் – என்றும், முண். (3-1-3) – பரமம் ஸாம்யமுபைதி - உயர்ந்த ஒற்றுமையை அடைகிறான் - என்றும், பெரியதிருமொழி (11-8-5) - தம்மையேயொக்க அருள் செய்வர் – என்றும் கூறுவதற்கு ஏற்ப தனது ஸ்வரூபத்தைப் பெற்றார். மனைவி ஒருவள் தனக்கு விருப்பமான ஆபரணத்தைப் பெற்றது போன்று, திருவாய்மொழி (3-3-1) - வழுவிலா அடிமை செய்ய வேண்டும் - என்றும், திருவாய் (10-10-11) – அவாவற்று வீடு பெற்ற - என்றும் கூறுவதற்கு ஏற்ப மோக்ஷத்தைப் பெறுவதன் பலனாக உள்ள கைங்கர்யத்தை ஆழ்வார் அடைந்தார். ஆழ்வார் அருளிச்செய்த தமிழ் வேதத்தில் பொதிந்து கிடக்கும் அனைத்தையும் ஸ்வாமி நாதமுனிகள், ஆழ்வாருடையக் க்ருபையால் பெற்றார். அதன் பின்னர் ஆசார்ய வழியில் உபதேசத்தைப் பெற்ற ஸ்வாமி ஆளவந்தார், தமிழ் வேதங்களுடைய ஆழ்பொருள்கள் அனைத்தையும் அறிந்து, அவற்றை தாம் எப்போதும் எண்ணியபடி இருந்தார். இதன் விளைவாக ஏற்பட்ட ப்ரீதியானது, அவருடைய மனதளவில் மட்டுமே அடங்கிவிடாமல் இருந்தது. அதனை மற்றவர்களுக்கும் அளிக்கவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. ஸம்ஸாரிகள் ஆழ்ந்த துக்கத்தில் இருந்ததைக் கண்ணுற்ற ஆளவந்தார், தனக்கு ஏற்பட்ட பகவத் அனுபவத்தை இவர்கள் இழந்து விடக்கூடாது என்று தீர்மானித்தார். அப்படிப்பட்ட கருணையால், அனைத்து உபநிஷத்துக்களுடைய ஆழ்பொருள்களை உள்ளடக்கியதும், அறிவதற்கு இயலாததும் ஆகிய அனைத்தையும், அனைவரும் எளிதாக அறியும்படியாக இந்த ஸ்தோத்ரத்தில் வெளியிடுகிறார்.

ஸ்வாமி ஆளவந்தார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்